செய்தி வெளியீடு எண்: 556 நாள்: 29.11.2016

## செய்திவெளியீடு

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்து கூட்டுறவு அச்சகங்களின் மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம்

********

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று (29.11.2016) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு அச்சகங்களின் மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது. தமிழ்நாட்டில் மொத்தம் 26 கூட்டுறவு அச்சகங்கள் 12,438 உறுப்பினர்களுடனும், ரூ.2.36 கோடி பங்குத்தொகையுடனும் செயல்பட்டு வருகின்றன.

இவை, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் அச்சுத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. கடந்த 2011–12 ஆம் ஆண்டு ரூ.45 கோடியாக இருந்த ஆண்டுக்குறியீடு தற்போது 2016–17 ஆம் ஆண்டிற்கு ரூ.71.23 கோடியாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நடப்பாண்டில் 31.10.2016 வரை ரூ.29.40 கோடி அளவிற்கு பணிகளை செய்துமுடித்துள்ளன. மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அச்சகங்கள் அனைத்தும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், சென்னை, சேலம், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 7 கூட்டுறவு அச்சகங்களில் 2013–14 ஆம் ஆண்டில் தலா ரூ.52,60,470 மதிப்பில் ரூ.3.68 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்களுக்கான கணினி எழுதுபொருட்களை தயாரிக்கும் மற்றும் அச்சடிக்கும் பணிகளையும், வண்ண அச்சுப் பணிகளையும் இவ்வச்சகங்கள் மேற்கொண்டு வருகின்றன. **மாண்புமிகு அம்மா** அவர்களின் 5 ஆண்டு பொற்கால ஆட்சியில் ரூ.249.18 கோடி அளவில் அச்சுப்பணிகளை கூட்டுறவு அச்சகங்கள் சிறப்பாக மேற்கொண்டுள்ளன.

மேலும், கூட்டுறவு அச்சகங்கள் எதிர்வரும் 2017–ம் ஆண்டிற்கான நாட்காட்டிகள் உள்ளிட்ட அச்சுப் பணிகளை அதிக அளவில் பெற்று, உரிய காலத்திற்குள் சிறப்பாக செய்து முடிக்கவும், நிலுவையுள்ள தணிக்கையினை காலதாமதம் இன்றி உடன் முடித்திடவும், கூட்டுறவு அச்சகங்கள் அனைத்தும் தொடர்ந்து இலாபத்தில் செயல்படுவதற்கு சிறப்பான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், திரு அ. ஞானசேகரன், இ.ஆப., கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், முனைவர் திரு க.இராசேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திருமதி ஆர்.பிருந்தா, மற்றும் இணைப்பதிவாளர் திரு.வெ.பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**